**சாதாரண கூட்டம்**

**கூத்தாநல்லூர் நகராட்சியின் 2022ம் ஆண்டு** ஆகஸ்ட் மாதம் 30 **நாள்** செவ்வாய்கிழமை காலை 11.00 **மணிக்கு நடைபெற்ற** சாதாரணக் **கூட்ட நடவடிக்கைகள்**

| மன்றக்கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப்பொருள் | மன்றத்தின் தீர்மானம் |
|---|---|---|
| 30.08.22022 | **பொருள் எண் 1**<br>நகராட்சி ஆணையர் அவர்களது ஜீலை 2022 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது<br>அலுவலக குறிப்பு :- பதிவு செய்யலாம் (ந.க.எண். 2105/2011/சி1) | **தீர்மானம் எண்:- 74**<br>**அனுமதிக்கப்பட்டது** |
| 30.08.22022 | **பொருள் எண் 2**<br>நகராட்சி பொறியாளர் அவர்களது ஜீலை 2022 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது<br>அலுவலக குறிப்பு :- பதிவு செய்யலாம் (ந.க.எண். 2105/2011/சி1) | **தீர்மானம் எண்:- 75**<br>**அனுமதிக்கப்பட்டது** |
| 30.08.22022 | பொருள் எண் 3<br>இந்நகராட்சிக்குட்பட்ட 5வது வார்டில் உள்ள பேருந்து நிலையத்தில் தூய்மை இந்தியா திட்டம் 2.O 2022-23ன் கீழ் பொது கழிப்பிடம் கட்டும் பணிக்கு மத்திய அரசின் நிதி தொகை ரூ.18.14 மற்றும் மாநில அரசின் நிதி ரூ.11.97 மற்றும் பொது நிதியிலிருந்து ரூ.6.17 இலட்சம் ஆக கூடுதல் தொகை ரூ.36.28 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளவும் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து நிர்வாக அனுமதியும் நிதி ஒதுக்கீடும் கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு பிரேரணை அனுப்பப்பட வேண்டியுள்ளதால் எனவே மேற்படி தொகை ரூ.36.28 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தபுள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம்.<br>(ந.க.எண்.619/2022/இ1) | **தீர்மானம் எண்:- 76**<br>**அனுமதிக்கப்பட்டது** |

| | | |
|---|---|---|
| 30.08.22022 | **பொருள் எண் 4**<br>இந்நகராட்சிக்குட்பட்ட 2வது வார்டு அய்யன் தோட்டச்சேரியில் தூய்மை இந்தியா திட்டம் 2.O 2022-23ன் கீழ் சமுதாய கழிப்பிடம் கட்டும் பணிக்கு மத்திய அரசின் நிதி தொகை ரூ.9.64 மற்றும் மாநில அரசின் நிதி ரூ.6.36 மற்றும் பொது நிதியிலிருந்து ரூ.3.28 இலட்சம் ஆக கூடுதல் தொகை ரூ.19.28 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளவும் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து நிர்வாக அனுமதியும் நிதி ஒதுக்கீடும் கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு பிரேரணை அனுப்பப்பட வேண்டியுள்ளதால் எனவே மேற்படி தொகை ரூ.19.28 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம்.<br>(ந.க.எண்.619/2022/இ1) | **தீர்மானம் எண்:- 77**<br>**அனுமதிக்கப்பட்டது** |
| 30.08.22022 | **பொருள் எண் 5**<br>இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 14 மேல்கொண்டாழி ஆட்டிறைச்சி கட்டிடம் முகப்பில் வெயில் மற்றும் மழையின் தாக்கம் இன்றி இருக்க பயன்படுத்துவோர் மற்றும் வியாபாரிகளின் நலன் கருதி 4 மீட்டர் அளவிற்கு மேல்கூரையும், மற்றும் தெற்கு பகுதியில் சுற்றுச்சுவரை ஒட்டி மீன் கடைகள் அமைப்பதற்கு மேற்கூரை மற்றும் தரை அமைத்து தருமாறு நகரமன்ற தலைவர் மற்றும் உறுப்பினர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ. 4.75 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>(ந.க.எண். ) | **தீர்மானம் எண்:- 78**<br>**அனுமதிக்கப்பட்டது** |

| | | |
|---|---|---|
| 30.08.22022 | **பொருள் எண் 6**<br>இந்நகராட்சிக்குட்பட்ட 5வது வார்டு நகராட்சி அலுவலகம் பின்புறம் தூய்மை இந்தியா திட்டம் 2.O 2022-23ன் கீழ் நுண்ணுயிர் உரமையம் (2 MT) அமைக்கும் பணிக்கு ரூ. 23.00 இலட்சம் மதிப்பீட்டில் மத்திய அரசின் நிதி 11.50 இலட்சம், மாநில அரசின் நிதி 7.59 இலட்சம், நகராட்சி பொதுநிதியிலிருந்து ரூ.3.91 இலட்சத்தில் மேற்கொள்ளவும் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து நிர்வாக அனுமதியும் நிதி ஒதுக்கீடும் கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு பிரேரணை அனுப்பப்பட வேண்டியுள்ளதால் எனவே மேற்படி தொகை ரூ.23.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தபுள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம்.<br>(ந.க.எண்.619/2022/இ1) | **தீர்மானம் எண்:- 79**<br>**அனுமதிக்கப்பட்டது** |
| 30.08.22022 | **பொருள் எண் 7**<br>கூத்தாநல்லூர் நகராட்சியில் நகர்மன்ற தலைவர், ஆணையர் மற்றும் பொறியாளர் ஆகியோர்களின் பயன்பாட்டிற்கு புதியதாக ஸ்கார்பியோ ஈப்பு வாகனம்-1 மற்றும் பொலிரோ ஈப்பு வாகனம் -2 வாகனங்கள் புதிதாக நகராட்சி நிர்வாக ஆணையரகம் சென்னையிடமிருந்து வரப்பெற்றுள்ளது. மேற்படி வாகனத்திற்கு காப்பீடு, சாலை வரி, வாகன பதிவு மற்றும் இதர உதிரிபாகங்கள் புதிதாக பொருத்துவதற்கும் அதற்கான பணிகளை மேற்கொள்ள உத்தேச செலவினத் தொகை ரூ.10,00,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>1. அவசர அவசியம் கருதி செலவினத் தொகை ரூ.10,00,000/-க்கு நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்றதை மன்றம் ஏற்கலாம்.<br>(ந.க.எண்.222/2022/இ1) | **தீர்மானம் எண்:- 80**<br>**அனுமதிக்கப்பட்டது** |

| | | |
|---|---|---|
| 30.08.22022 | **பொருள் எண் 8**<br>75வது சுதந்திர தின அமுத திருவிழா 2022 சிறப்பான வகையில் கொண்டாடுவதற்கு இந்நகராட்சி பகுதியில் உள்ள அனைத்து வீடுகள், வணிக வளாகங்கள், மற்றும் தனியார் கட்டிடங்களில் ஆகஸ்ட் 13ம் தேதி முதல் 15ம் தேதி வரையிலான காலத்தில் தேசியக்கொடி பறக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே இந்நகராட்சியில் ஆகஸ்ட் 15ம் தினத்தன்று சுதந்திர தினவிழா கொண்டாடி அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு பணி சான்றிதழ் மற்றும் தேசிய கொடி வர்ணங்களில் ஒளிரவிடுதல் போன்ற பணிகள் மேற்கொள்வதற்கு உத்தேச செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது<br>அலுவலக குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தபுள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம்.<br>(ந.க.எண்.628/2022/இ1) | **தீர்மானம் எண்:- 81 அனுமதிக்கப்பட்டது** |
| 30.08.22022 | **பொருள் எண் 9**<br>இந்நகராட்சி பகுதியில் தூய்மை இந்தியா திட்டத்தினை செயல்படுத்தும் விதமாக நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் 04.01.2022ந் தேதிய உத்தரவு ந.க.எண். 26458/2016/பி1 SBM2.0வின்படியும், நகர்புற விவகார அமைச்சகத்தால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறை கையேட்டில் குறிப்பிட்டுள்ளவாறும், இந்நகராட்சியினை குப்பையில்லா நகரமாக மாற்றுவதற்கு IEC (Internation Education Communication) மூலமாக மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த விளம்பர பதாகைகள், நோட்டீஸ்கள், முகாம்கள், பள்ளிகளில் போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்குதல், மேலும் இதர பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டி உள்ளது. மேற்படி பணிகளை மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.1.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம் | **தீர்மானம் எண்:- 82 அனுமதிக்கப்பட்டது** |

| | | |
|---|---|---|
| 30.08.22022 | **பொருள் எண் 10**<br>இந்நகராட்சி டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிகளுக்கான ஒப்பந்த காலம் 31.08.2022 உடன் முடிவடையும் தருவாயில் டெங்கு தடுப்பு பணியாளர்களின் தினக்கூலி விலை விகிதம் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களால் நிர்ணயம் செய்து வழங்கப்படவில்லை. எனவே நகராட்சி நிர்வாகத்தின் அவசர அவசியம் கருதி மேற்படி ஒப்பந்த நிறுவனத்தின் காலம் 01.09.2022 முதல் 30.11.2022 வரை மூன்று மாத காலத்திற்கு ஏற்கனவே உள்ள பழைய ஒப்பந்தபுள்ளி விகிதத்தில் அவசர அவசியம் கருதி ஏற்கனவே தூய்மை பணியாளர்களை வழங்கி வரும் தீ-கரன் சோசியல் டெவலப்மெண்ட் பவுன்டேஷன் நிறுவனத்திற்கு 01.09.2022 முதல் 30.11.2022 வரை மேற்கண்ட பணியாளர்களை மூன்று மாத காலத்திற்கு நீட்டிப்பு செய்ய ஆகும் உத்தேச செலவினம் தொகை ரூ.10,85,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண். 484/2020/எச்1) | **தீர்மானம் எண்:- 83**<br>**அனுமதிக்கப்பட்டது** |
| 30.08.22022 | **பொருள் எண் 11**<br>இந்நகராட்சி பகுதியில் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கான ஒப்பந்த நிறுவனத்தின் அனுமதி காலம் 31.08.2022 உடன் முடிவடைய உள்ளது. இந்நிலையில் பொது சுகாதாரம் மற்றும் தூய்மை பணி மேற்கொள்ள போதிய நிரந்தர தூய்மை பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் மாவட்ட ஆட்சியரின் தினக்கூலி அடிப்படையில் கூடுதலாக தூய்மை பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் தனியார் மூலம் அமர்த்தி பொது சுகாதாரப்பணிகளை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தஞ்சாவூர் அவர்களுக்கு 14.07.2022 தேதிய கடிதம் அனுப்பி அனுமதி கேட்டுக் கொள்ளப்பட்டதில் இதுவரை அனுமதி வழங்கப்படவில்லை. எனவே இந்நகராட்சியின் அவசர அவசியம் கருதி திடக்கழிவு மேலாண்மை பணிக்காக மேற்கண்ட பணியாளர்களை வழங்கி வரும் தீ-கரன் சமூக தொண்டு நிறுவனத்திற்கு பழைய ஒப்பந்தபுள்ளி விலையிலேயே தூய்மை பணியாளர்களை 01.09.2022 முதல் 30.11.2022 வரை 3 மாதங்களுக்கு நீட்டிப்பு செய்ய ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.26,00,000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. அவசர அவசியம் கருதியும், பொது சுகாதார நலன் கருதியும் மேற்படி ஒப்பந்த்தாரரிடம் அதே ஒப்பந்தபுள்ளியின்படி 01.09.2022 முதல் 30.11.2022 முடிய நீட்டிக்க மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண் 445/2020/எச்1) | **தீர்மானம் எண்:- 84**<br>**அனுமதிக்கப்பட்டது** |
| 30.08.22022 | **பொருள் எண் 12**<br>**இந்நகராட்சியில் குடிநீர் பராமரிப்பு மற்றும் பழுது நீக்கம் செய்யும் பணிகளுக்கு இந்நகர் மன்ற தீர்மான எண் 726 நாள் 29.05.2020ல் ஓராண்டு காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் வீ.எழில்மாறன் என்ற ஒப்பந்ததாரருக்கு அனுமதி பெறப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.** மேற்படி | **தீர்மானம் எண்:- 85**<br>**அனுமதிக்கப்பட்டது** |

| | | |
|---|---|---|
| | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தகாலம் 31.08.2022ம் தேதியுடன் முடிவடைய உள்ளதால் கோடைகால குடிநீர் பணிகளின் அவசர அவசியம் கருதியும், நிர்வாக நலன் கருதியும் மேற்கண்ட ஒப்பந்ததாரருக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட அதே ஒப்பந்தபுள்ளியின் விலை விகிதத்திலேயே பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் குடிநீர் பணிகள் மேற்கொள்ளவும், மேலும் மூன்று மாதங்களுக்கு (01.09.2022 முதல் 30.11.2022) மட்டும் நீட்டிப்பு செய்யவும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.2,58,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண். 496/2020/இ1) | |
| 30.08.22022 | பொருள் எண் 13<br>கூத்தாநல்லூர் நகராட்சி பகுதியில் 7வது வார்டில் அமைந்துள்ள அரசு மருத்துவமனையில் 24 மணி நேரமும் மருத்துவர்கள் இருப்பதில்லை. இதனால் கூத்தாநல்லூர் நகர பகுதி மக்கள் நோய் நொடிகளால் அவதிப்பட்டு வருகிறார்கள். கூத்தாநல்லூர் அரசு மருத்துவமனையை கூத்தாநல்லூர் தாலுக்கா அரசு மருத்துவமனையாக மாற்றம் செய்வதற்கு பரிந்துரை செய்யவும், மேல் நடவடிக்கைக்காக சம்மந்தப்பட்ட துறைக்கு அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண். 636/2022/எச்1) | தீர்மானம் எண்:- 86<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 30.08.22022 | பொருள் எண் 14<br>இந்நகராட்சி பகுதியில் தினந்தோறும் 7 டன் குப்பைகள் உருவாகின்றன. மேற்படி குப்பைகளில் 4.5 டன் மக்கும் குப்பையும் 2.5 டன் மக்காத குப்பையும் உருவாகிறது. 2.5 டன் மக்காத குப்பையில் சுமார் 1.5 டன் பிளாஸ்டிக் கழிவுகள் உற்பத்தியாகின்றன. மேற்படி பிரிக்கப்படும் பிளாஸ்டிக் கழிவுகள் அல்ட்ரா டெக் சிமெண்ட் நிறுவனத்திற்கு அரசு உத்தரவின்படி இலவசமாக இந்நகராட்சி டிப்பர் லாரி மூலம் வாரம் ஒருமுறை அனுப்பப்பட்டு வருகிறது. மேற்படி அல்ட்ரா டெக் சிமெண்ட் நிறுவனத்திற்கு அனுப்புவதால் இந்நகராட்சிக்கு எரிபொருள் செலவு பணியாளர்களின் பணிச்சுமை அதிகமாக உள்ளதாலும் தன்னார்வ தொண்டு நிறுவனமான கார்பன் டைனமிக்ஸ் என்ற நிறுவனத்தின் 20.05.2022ந் தேதிய கடிதத்தில் பிளாஸ்டிக் குப்பைகளை தரம் பிரித்து இலவசமாக அவர்களே எடுத்துச் செல்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.எனவே உரக்கிடங்கில் சேகரிக்கப்பட்டுள்ள குப்பைகளிலிருந்து பிளாஸ்டிக்கை தரம் பிரித்து எடுப்பதற்கு ஏதுவாக மேற்படி நிறுவனத்தின் செலவிலேயே பணியாளர்கள் உரக்கிடங்கில் நியமிக்கப்பட்டு பராமரித்துக் கொள்வதாகவும் தெரிவித்துள்ளார்கள். எனவே மேற்படி தன்னார்வ தொண்டு நிறுவனத்தினை பிளாஸ்டிக் கழிவுகளை எடுத்துச் செல்வதற்கும், பணியாளர்கள் தங்கி பணியாற்றுவதற்கும் அனுமதி வழங்க மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களிடம் 01.08.2022ந் தேதி முன் அனுமதி பெற்றதை மன்றம் ஏற்கலாம். | தீர்மானம் எண்:- 87<br>அனுமதிக்கப்பட்டது |
| 30.08.22022 | பொருள் எண் 15<br>இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் தமிழ்நாடு அரசு ஆணை எண் – (ns) 157 நாள் 03.11.2016ன்படி இந்தியன் ரெட்கிராஸ் சொஸைட்டி திருவாரூர் மாவட்ட கிளைக்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து நகராட்சிகளுக்கு ஆண்டு சந்தா தொகை ரூ.2,500/- செலுத்த ஆணையிடப்படுகிறது. அதன்படி இந்நகராட்சிக்கு 2018-2016 முதல் 2022-2023 வரையிலான ஐந்து ஆண்டுக்கான சந்தா நிலுவைத் தொகையாக ரூ.12,500/- பட்டியல் வரப்பெற்றுள்ளது. எனவே அத்தொகையினை இந்தியன் ரெட்கிராஸ் சொஸைட்டி திருவாரூர் மாவட்ட கிளைக்கு செலுத்திட நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>1. மன்றம் ஏற்கலாம்.<br>2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களிடம் 26.07.2022 அன்று முன் அனுமதி பெற்றதை மன்றம் ஏற்கலாம்.<br>(ந.க.எண்.619/2022/எச்1) | தீர்மானம் எண்:- 88<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 30.08.22022 | **பொருள் எண் 16**<br>இந்நகராட்சிக்குட்பட்ட நாகங்குடி மேலத்தெருவில் உள்ள டேங்கில் புதிய மோட்டார் பொருத்தும் பணி, நகர்மன்ற தலைவர் அறை பெயிண்டிங், மற்றும் மேல்கொண்டாழி நீர்தேக்க நிலையத்தில் பராமரிப்பு பணிக்கு 25.08.2022 அன்று கோரப்பட்ட ஒப்பந்தபுள்ளியில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றுள்ளது. | **தீர்மானம் எண்:- 89**<br>**அனுமதிக்கப்பட்டது** |

| **வ. எண்** | **நிறுவனத்தின் பெயர்** | **ஒப்பந்த தொகை** | **ஒப்பந்தபுள்ளி தொகை** | **சதவிகிதம்** |
|---|---|---|---|---|
| 1 | ஸ்ரீ பகவதி ஏஜென்சீஸ் இன்டியா பிரைவேட் லிமிடெட் மன்னார்குடி | 127251 | 126931 | 0.25% மதிப்பீட்டைவிட குறைவு |
| 2 | காவ்யா என்டர்பிரைசஸ் மன்னார்குடி | 127251 | 127455 | 0.16% மதிப்பீட்டைவிட அதிகம் |

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் வரிசை எண் 1ல் உள்ள. ஸ்ரீ பகவதி ஏஜென்சீஸ் இன்டியா பிரைவேட் லிமிடெட் மன்னார்குடி என்ற ஒப்பந்ததாரரிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளி தொகை மதிப்பீட்டினை விட 0.25% குறைவாக உள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. குறைவான ஒப்பந்தபுள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்.535/2020/இ1)

<table>
<tr>
<td>30.08.22022</td>
<td>

**பொருள் எண் 17**

இந்நகராட்சி அலுவலக கட்டிடத்தின் முகப்பில் “ தமிழ் வாழ்க” பெயர் பலகை வைக்கும் பணிக்கு 25.08.2022 அன்று கோரப்பட்ட ஒப்பந்தபுள்ளியில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

<table>
<tr><th>வ. எண்</th><th>நிறுவனத்தின் பெயர்</th><th>ஒப்பந்த தொகை</th><th>ஒப்பந்தபுள்ளி தொகை</th><th>சதவிகிதம்</th></tr>
<tr><td>1</td><td>ஸ்ரீ பகவதி ஏஜென்சீஸ் இன்டியா பிரைவேட் லிமிடெட் மன்னார்குடி</td><td>92400</td><td>92300</td><td>0.11% மதிப்பீட்டைவிட குறைவு</td></tr>
<tr><td>2</td><td>காவ்யா என்டர்பிரைசஸ் மன்னார்குடி</td><td>92400</td><td>92520</td><td>0.13% மதிப்பீட்டைவிட அதிகம்</td></tr>
</table>

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் வரிசை எண் 1ல் உள்ள. ஸ்ரீ பகவதி ஏஜென்சீஸ் இன்டியா பிரைவேட் லிமிடெட் மன்னார்குடி என்ற ஒப்பந்ததாரரிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளி தொகை மதிப்பீட்டினை விட 0.11% குறைவாக உள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. குறைவான ஒப்பந்தபுள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்.534/2020/இ1)

</td>
<td>

**தீர்மானம் எண்:- 90**
**அனுமதிக்கப்பட்டது**

</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| 30.08.22022 | **பொருள் எண் 18**<br>இந்நகராட்சிக்குட்பட்ட இந்தியன் வங்கி எதிரில் உள்ள உயர் கோபுர மின்விளக்கு சரி செய்யும் பணிக்கு 25.08.2022 அன்று கோரப்பட்ட ஒப்பந்தபுள்ளியில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றுள்ளது. | **தீர்மானம் எண்:- 91 அனுமதிக்கப்பட்டது** |

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்த தொகை | ஒப்பந்தபுள்ளி தொகை | சதவிகிதம் |
|---|---|---|---|---|
| 1 | ஸ்ரீ பகவதி ஏஜென்சீஸ் இன்டியா பிரைவேட் லிமிடெட் மன்னார்குடி | 197031 | 196696 | 0.17% மதிப்பீட்டைவிட குறைவு |
| 2 | காவ்யா என்டர்பிரைசஸ் மன்னார்குடி | 197031 | 197268 | 0.12% மதிப்பீட்டைவிட அதிகம் |

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் வரிசை எண் 1ல் உள்ள. ஸ்ரீ பகவதி ஏஜென்சீஸ் இன்டியா பிரைவேட் லிமிடெட் மன்னார்குடி என்ற ஒப்பந்ததாரரிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளி தொகை மதிப்பீட்டினை விட 0.17% குறைவாக உள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. குறைவான ஒப்பந்தபுள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்.533/2020/இ1)

30.08.22022

**பொருள் எண் 19**

இந்நகராட்சிக்குட்பட்ட 5வது வார்டில் உள்ள பேருந்து நிலையத்தில் தூய்மை இந்தியா திட்டம் 2.O 2022-23ன் கீழ் பொது கழிப்பிடம் மற்றும் சிறுநீர் கழிப்பிடம் கட்டும் பணிக்கு 12.08.2022 அன்று கோரப்பட்ட ஒப்பந்தபுள்ளியில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்த தொகை | ஒப்பந்தபுள்ளி தொகை | சதவிகிதம் |
|---|---|---|---|---|
| 1 | கலை கண்ட்ரக்ஷன்ஸ் ஒப்பந்ததாரர் கொரடாச்சேரி | 2448198-83 | 2447407-25 | 0.03% மதிப்பீட்டைவிட குறைவு |
| 2 | திரு.ஜி.கலியமூர்த்தி ஒப்பந்ததாரர் கீழவாழாச்சேரி அத்திக்கடை | 2448198-83 | 2448775-50 | 0.02% மதிப்பீட்டைவிட அதிகம் |

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் வரிசை எண் 1ல் உள்ள கலை கண்ட்ரக்ஷன்ஸ் ஒப்பந்ததாரர் கொரடாச்சேரி என்ற ஒப்பந்ததாரரிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளி தொகை மதிப்பீட்டினை விட 0.03% குறைவாக உள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. குறைவான ஒப்பந்தபுள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை ஏற்கலாம்.

(ந.க.எண்.619/2022/இ1)

**தீர்மானம் எண்:- 92**

**அனுமதிக்கப்பட்டது**

<table>
<tr>
<td>30.08.22022</td>
<td>

**பொருள் எண் 20**

இந்நகராட்சிக்குட்பட்ட 2வது வார்டில் உள்ள அய்யன் தோட்டச்சேரியில் தூய்மை இந்தியா திட்டம் 2.O 2022-23ன் கீழ் சமுதாய கழிப்பிடம் கட்டும் பணிக்கு 12.08.2022 அன்று கோரப்பட்ட ஒப்பந்தபுள்ளியில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்த தொகை | ஒப்பந்தபுள்ளி தொகை | சதவிகிதம் |
|---|---|---|---|---|
| 1 | திரு.ஜி.கலியமூர்த்தி ஒப்பந்ததாரர் கீழவாழாச்சேரி அத்திக்கடை | 1698873.52 | 1698482.86 | 0.02% மதிப்பீட்டைவிட குறைவு |
| 2 | கலை கண்ட்ரக்ஷன்ஸ் ஒப்பந்ததாரர் கொரடாச்சேரி | 1698873.52 | 1699442.27 | 0.03% மதிப்பீட்டைவிட அதிகம் |

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் வரிசை எண் 1ல் உள்ள. திரு.ஜி.கலியமூர்த்தி ஒப்பந்ததாரர் கீழவாழாச்சேரி அத்திக்கடை என்ற ஒப்பந்ததாரரிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளி தொகை மதிப்பீட்டினை விட 0.02% குறைவாக உள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. குறைவான ஒப்பந்தபுள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை ஏற்கலாம். (ந.க.எண்.619/2022/இ1)

</td>
<td>

**தீர்மானம் எண்:- 93**
**அனுமதிக்கப்பட்டது**

</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| 30.08.22022 | பொருள் எண் 21<br>கூத்தாநல்லூர் நகராட்சி நகரமைப்பு வார்டு எண் 3, பிளாக் எண் 31, ந.அ.எண்கள். 2/1 மற்றும் 3/1 (பழைய புல எண்கள் 109/1, 110/1)ல் அமையும் மனைப்பிரிவிற்கு இந்நகர் மன்ற தீர்மான எண் 58/2022 நாள் 30.06.2022ன்படி தானபத்திரம் ஏற்கப்பட்டதை தொடர்ந்து மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், துணை இயக்குநர்/உதவி இயக்குநர் (கூ.பொ) திருவாரூர் அவர்களால் ந.க.எண். 72/2020/TVR நாள் 02.08.2022ல் மனைப்பிரிவு வரைபடம் ம.வ/மா.ந.ஊ.அ (TVR) எண் 24/2022 என எண்ணிடப்பட்டு இறுதி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி மனைப்பிரிவு வரைபடம் இறுதி ஒப்புதல் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>இந்நகர் மன்றம் தீர்மானம் எண் 58/2022 நாள் 30.06.2022ன்படி தானபத்திரம் ஏற்கப்பட்டதை தொடர்ந்து மனைப்பிரிவு வரைபடத்திற்கு இறுதி ஒப்புதல் வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 92/2021/எப்1) | தீர்மானம் எண்:- 94<br>அனுமதிக்கப்பட்டது |
| 30.08.22022 | பொருள் எண் 22<br>கூத்தாநல்லூர் நகராட்சிக்குட்பட்ட கூத்தாநல்லூர் கிராமம் (பழைய புல எண்கள் 109/5 பகுதி, 6, 110/4, 5, 8, 9, 10, 111/2, 4, 5, 6) நகரமைப்பு வார்டு 3, பிளாக் 31, புதிய நகரளவு எண்கள் 2/5, 2/6, ¾ 3/5, 3/8, 3/9, 3/10, 7/2, 7/4, 7/5 மற்றும் 7/6ல் அமையும் 4.13 ஏக்கர் (16,728 ச.மீட்டர்) நிலம் அரசின் ஒப்புதல் பெறப்பட்ட கூத்தாநல்லூர் முழுமை திட்டத்தில் விவசாய பகுதியாக உள்ளது. மேற்படி இடம் விவசாய பகுதியாக உள்ளதை குடியிருப்பு பகுதியாக நிலப்பயன் மாற்றம் செய்து அரசாணை பெற்று தருமாறு மேற்படி இடத்தின் உரிமையாளர்களாகிய திரு.முகம்மது சாதிக் இஷா இல்லம், No.3. குப்பம் ரோடு, கொட்டிவாக்கம், சென்னை மற்றும் மூவர் விண்ணப்பித்துள்ளார்கள். இதன்மீது ஆலோசனை மற்றும் ஆட்சேபனை தெரிவிக்க விரும்புவோர் 30 நாட்களுக்குள், கூத்தாநல்லூர் உள்ளூர் திட்டக்குழும உறுப்பினர் செயலருக்கு (ஆணையர், கூத்தாநல்லூர் நகராட்சி) எழுத்து மூலமாக தெரிவிக்க கேட்டு தமிழ் தினசரி நாளிதழ் மற்றும் ஆங்கில தினசரி நாளிதழ்களில் கடந்த 24.07.2022ல் விளம்பர பிரசுரம் செய்யப்பட்டது. இது குறித்து பொது மக்களிடம் இருந்து ஆட்சேபனையோ, ஆலோசனையோ ஏதும் பெறப்படவில்லை. எனவே மனுதாரர் சமர்பித்துள்ள நிலப்பயன்பாடு விண்ணப்பம் மற்றும் ஆவணங்களை நகர் ஊரமைப்பு இயக்குநர், 807, அண்ணாசாலை, சென்னை மற்றும் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் திருவரூர் அவர்கள் வழியாக, அரசு செயலாளர் வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை சென்னை அவர்களுக்கு பரிந்துரை செய்து அனுப்பிட நகரமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண். 476/2022/எப்1) | தீர்மானம் எண்:- 95<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 30.08.22022 | **பொருள் எண் 23**<br>கூத்தாநல்லூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 11ல் நமக்கு நாமே திட்டம் 2021-2022ன் கீழ் நகர்மன்ற தலைவர் மற்றும் நகர மன்ற உறுப்பினர்கள் கேட்டுக் கொண்டதற்கினங்க CCTV Camera பொருத்தும் பணிக்கு ரூபாய் 15.00 இலட்சத்தில் நிதி ஒதுக்கீடு செய்து உத்தரவு பெறப்பட்டு நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளதை மன்றத்தின் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. மேற்கண்ட செலவினத்தை நமக்கு நாமே திட்டத்தின் கீழ் செய்து கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 757/2021/இ1) | **தீர்மானம் எண்:- 96 அனுமதிக்கப்பட்டது** |
| 30.08.22022 | **பொருள் எண் 24**<br>கூத்தாநல்லூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 20 மற்றும் 21ல் நமக்கு நாமே திட்டம் 2021-22ன்கீழ் நகர்மன்ற தலைவர் மற்றும் நகர மன்ற உறுப்பினர்கள் கேட்டுக்கொண்டதற்கினங்க CCTV Camera பொருத்தும் பணிக்கு ரூபாய் 17.70 இலட்சத்தில் நிதி ஒதுக்கீடு செய்து உத்தரவு பெறப்பட்டு நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளதை மன்றத்தின் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. மேற்கண்ட செலவினத்தை நமக்கு நாமே திட்டத்தின் கீழ் செய்து கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.757/2021/இ1) | **தீர்மானம் எண்:- 97 அனுமதிக்கப்பட்டது** |
| 30.08.22022 | **பொருள் எண் 25**<br>கூத்தாநல்லூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 14ல் பொது நிதியின் கீழ் நகர்மன்ற தலைவர் மற்றும் நகர மன்ற உறுப்பினர்கள் கேட்டுக்கொண்டதற்கினங்க பாய்க்காரத்தெரு பாலம் மேம்படுத்தும் பணிக்கு உத்தேச மதிப்பீடு ரூபாய் 6.30 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. .<br>அலுவலக குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.775/2022/இ1) | **தீர்மானம் எண்:- 98 அனுமதிக்கப்பட்டது** |

| | | |
|---|---|---|
| 30.08.22022 | **பொருள் எண் 26**<br>கூத்தாநல்லூர் நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும் குடிநீர் நிதியிலிருந்து நகர்மன்ற தலைவர் மற்றும் நகர மன்ற உறுப்பினர்கள் கேட்டுக்கொண்டதற்கினங்க பொதுக்குடிநீர் குழாய் சீரமைக்கும் பணிகள் மேற்கொள்வதற்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பு ரூபாய் 3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணியினை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 777/2022/இ1) | **தீர்மானம் எண்:- 99**<br>**அனுமதிக்கப்பட்டது** |
| 30.08.22022 | **பொருள் எண் 27**<br>இந்நகராட்சிக்குட்பட்ட புதிய நகராட்சி அலுவலகம், பழைய நகராட்சி அலுவலகம்,வண்டிப்பேட்டை வணிக வளாகம், மற்றும் ரேடியோ பார்க் (OCC) ஆகிய இடங்களில் உள்ள முன் முகப்பில் இரும்பு கேட் அமைப்பதற்கு உத்தேச மதிப்பீடு தொகை ரூ.2.60 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண்.774/2022/இ1)** | **தீர்மானம் எண்:- 100**<br>**அனுமதிக்கப்பட்டது** |
| 30.08.22022 | **பொருள் எண் 28**<br>கூத்தாநல்லூர் நகராட்சிக்குட்பட்ட எல்லைப்பகுதியில் பெயர் பலகை "Retro-Reflective Stainless Steel"'ல் அமைப்பதற்கு உத்தேச மதிப்பீடு தொகை ரூ.1.60 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண்.776/2022/இ1)** | **தீர்மானம் எண்:- 101**<br>**அனுமதிக்கப்பட்டது** |

ஒம்/ திருமதி. மு.பாத்திமா பஷீரா
நகர்மன்ற தலைவர்
கூத்தாநல்லூர் நகராட்சி

/ உண்மை நகல் உத்தரவின்படி/

ஆணையர்
கூத்தாநல்லூர் நகராட்சி